සියලු හිමිකම් ඇවිරිණි/ All Rights reserved

වයඹ පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
**Provincial Department of Education - NWP**
வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்

| 00 | T | I |
|---|---|---|

පළමු වාර පරීක්ෂණය - 10 ශ්‍රේණිය - 2018
First Term Test - Grade 10 - 2018
முதலாம் தவணைப் பரீட்சை - தரம் 10 - 2018

**சுட்டிலக்கம் ......................................... வணிகமும் கணக்கீட்டுக்கல்வியும் I நேரம் : 1 மணித்தியாலம்**

- **சகல வினாக்களுக்கும் விடையளிக்க.**

1. பின்வரும் நோக்கங்களுள் வணிக நிறுவனமொன்றில் காணக்கூடிய பிரதான நோக்கமாக அமைவது,
   1. மனித தேவை விருப்பங்களை நிறைவு செய்தல்.
   2. பொருட்கள் சேவைகளை உற்பத்தி செய்தல்.
   3. இலாபம் உழைத்தல்.
   4. வேலைவாய்ப்புக்களை தோற்றுவித்தல்.

2. பின்வரும் பண்புகளில் தேவைக்குரிய பண்புகளை மாத்திரம் கொண்டுள்ள தொகுதியினைத் தெரிவு செய்க.
   1. அத்தியவசியமானவை, பல்வேறுபட்டவை, வரையறுக்கப்பட்டவை
   2. பொதுவானவை, வரையறுக்கப்பட்டவை, பல்வேறுபட்டவை
   3. பொதுவானவை, உருவாக்கக் கூடியவை, வரையறுக்கப்படாதவை
   4. அத்தியவசியமானவை, உருவாக்கக் கூடியவை, வரையறுக்கப்பட்டவை

3. பின்வரும் வணிகங்களுள் பொருள் உறபத்தி வணிகமொன்றாகக் குறிப்பிடக் கூடியது?
   1. அழகுக்கலை நிறுவனம் 2. தயாரிக்கப்பட்ட உணவு வியாபார நிலையம்
   3. மொத்த வியாபார நிலையம் 4. காப்புறுதி நிறுவனம்

4. உற்பத்திக் காரணிகளையும் அதற்குரிய உதாரணங்களையும் சரியாகப் பொருந்தச் செய்யும் விடையினை தெரிவு செய்க.
   1. நிலம் - கட்டிடம் 2. உழைப்பு - கணக்காளர்கள்
   3. மூலதனம் - காட்டுவளம் 4. முயற்சி - முகாமையாளர்

5. பொருட்கள் சேவைகளுக்கிடையிலான வேறுபாட்டினை காட்டக் கூடிய பண்பொன்று
   1. விலைமட்டம் 2. வழங்கலின் அடிப்படை
   3. களஞ்சியப்படுத்தக்கூடிய ஆற்றல் 4. சின்னத்தின் அடிப்படை

6. உற்பத்திப் பொருளொன்றைச் சந்தைக்கு விநியோகிக்கும் போது கவனத்தில் கொள்ளப்படுகின்ற காரணியொன்றல்லாதது.
   1. நுகர்வோரின் வருமான மட்டம் 2. நுகர்வோரின் சுவை
   3. சமூக நிலைமை 4. விலைமட்டம்

7. வணிக நிறுவனங்களில் சில பின்வருமாறு
   A. மோட்டார் வாகன உற்பத்தி நிறுவனம்
   B. வங்கி நிறுவனம்
   C. கையடக்கத் தொலைபேசி உற்பத்தி நிறுவனம்
   D. தச்சுத் தொழில்
   சேவை உற்பத்தி வணிகங்களை மாத்திரம் கொண்டுள்ள விடை எது?
   1. A யும் C யுமாகும் 2. A யும் B யுமாகும் 3. A யும் D யுமாகும் 4. B யும் C யுமாகும்

8. பௌதீக ரீதியான நிரந்தர இடமின்றி நிகழ்காலத்தில் வணிக கருமங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. இதற்காகப் பயன்படுத்தப்படுகின்ற பிரதான வசதியானது.
   1. பக்ஸ் இயந்திரம் 2. தொலைபேசி 3. கணிணி 4. தகவல் தொழில்நுட்பம்



kalvi.lk

9. வணிகமொன்றில் வணிகத்திட்டத்தை உரியவாறு நடைமுறைப்படுத்தல் சரியாகத் தீர்மானங்களை எடுத்தல் என்பவை யாரால் மேற்கொள்ளப்படுவது
1. முகாமையாளர் 2. ஊழியர் 3. உரிமையாளர் 4. வழங்குனர்

10. வணிகமொன்றில் உரிமையாளர்கள் பின்வரும் எந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு ஆர்வம் காட்டுவதில்லை,
1. போதுமானளவு இலாபத்தை பெற்றுக் கொள்ளல்.
2. வணிகத்தின் எதிர்கால விருத்தி
3. நியாயமான சம்பளத்தைப் பெற்றுக் கொள்ளல்.
4. முதலீட்டின் பாதுகாப்பு

11. "பாட்டார் முறை" எனக் குறிப்பிடப்படுவது.
1. சுய தேவை உற்பத்தி முறையாகும 2. தகவல் பரிமாற்று முறையாகும்
3. பணப்பாவனை முறையாகும் 4. மிகை பொருள் உற்பத்தி முறையாகும்.

12. தேவையின் பண்பொன்றாக குறிப்பிடமுடியாதது.
1. எளிமையானது 2. ஆளுக்காள் வேறுபடக்கூடியது
3. வரையறுக்கப்பட்டது 4. உருவாக்க முடியாதிருத்தல்

13. "சினெக்" வெளிநாடொன்றில் வேலை செய்த பின்னர் நாடு திரும்பி புத்தக உற்பத்தி வணிகமொன்றை ஆரம்பித்தார். சினெக் வணிகத்தின் மீது அக்கறை கொள்ளாத பிரிவினர்
1. ஐயசிரி புத்தக உற்பத்தியாளர் 2. சினெக்
3. இலங்கை வங்கி 4. நறுமண சவர்க்கார உற்பத்தியாளர்

14. பின்வரும் வணிகங்களுள் சேவை வணிகமொன்றாகக் குறிப்பிடக் கூடியது.
1. அட்லஸ் கம்பனி 2. சிங்கர் நிறுவனம் 3. டயலொக் கம்பனி 4. மைக்ரோ கம்பனி

15. பின்வரும் காரணிகளுள் புறச்சூழல் காரணிக்குரிய காரணிகளாவன.
A ஊழியர்கள் B போட்டியாளர் C முகாமையாளர் D வழங்குநர்
1. A யும் D யுமாகும் 2. C யும் B யுமாகும்
3. A, B, C, D சகலதுமாகும் 4. B யும் D யுமாகும்

16. வணிகத்துக்குத் தேவையான மூலதனத்தை ஈடுபடுத்தும் நபர்கள் ......①... எனப்படுவதுடன் வணிகத்திடமுள்ள வளங்களை நெறிப்படுத்துவதற்குத் தேவையான தீர்மானங்களை எடுக்கும் நபர்கள் ....②.. ஆவர்.
மேலே குறிப்பிட்ட கூற்றில் ① ம் ② ம் இலக்கமிடப்பட்டுள்ள வெற்றிடங்களுக்குப் பொருத்தமான விடையினை முறையாகக் காட்டும் விடையானது
1. முகாமையாளர், உரிமையாளர் 2. உரிமையாளர் , முகாமையாளர்
3. அரசு, முகாமையாளர் 4. உரிமையாளர், அரசு

17. வணிகமொன்றின் நீடித்த வாழ்வு தங்கியிருப்பது
1. வழங்குநரின் அடிப்படையிலாகும். 2. போட்டியாளரின் அடிப்படையிலாகும்.
3. உரிமையாளரின் அடிப்படையிலாகும் 4. வாடிக்கையாளரின் அடிப்படையிலாகும்

18. இன்று எமது நாட்டில் தேங்காய்க்குக் காணப்படுகின்ற தட்டுப் பாட்டினை நீக்குவதற்கு அரசு தேங்காயினை இறக்குமதி செய்கின்றது. இது எச் சூழல் காரணிக்குரியது.
1. பொருளாதாரச் சூழல் 2. அரசியல் சூழல்
3. சட்டச் சூழல் 4. பூகோளச் சூழல்

19. நுகர்வோரின் பாவனைக்குப் பொருந்தாத பொருட்களை வணிகம் விற்பனை செய்கின்றதா? என்பதை தேடிப்பார்ப்பது.
1. கம்பனிப் பதிவாளராவார் 2. மத்திய சூழல் அதிகார சபையாகும்
3. பொதுச் சூழல் பரிசோதகராவார் 4. தொழிலாளர் இணக்க சபையாகும்

20. தற்காலத்தில் கணிணி மற்றும் தகவல் முறைமை பயன்படுத்தப்பட்டு கணக்கு வைத்தல் செயன்முறை மேற்கொள்ளப்படுவது எச்சூழற்காரணிக்குரியது.
1. அரசியல் சூழல் 2. பொருளாதாரச் சூழல் 3. தொழில்நுட்பச் சூழல் 4. சட்டச் சூழல்



kalvi.lk

21. பொருளாதாரச் சூழலுக்குரிய காரணியொன்றல்லாதது.
1. வரவு செலவு திட்டம் 2. வருமானப்பரம்பல்
3. பணவீக்கம் 4. சேமிப்பு

22. உள்நாட்டு வணிகங்களுக்கு பூகோளச் சூழலினால் உருவாகின்ற சாதகமான தாக்கமாக அமைவது.
1. உள்நாட்டில் பயிற்சி பெற்ற ஊழியர்கள் வெளிநாடுகளுக்குச் செல்லல்.
2. பாரிய போட்டிக்கு முகம் கொடுக்க வேண்டியேற்படல்.
3.உள்நாட்டுக் கலாச்சாரத்தில் பாதகமான தாக்கங்கள் ஏற்படல்.
4. வினைத்திறனான இயந்திர உபகரணங்களைப் பெற்றுக் கொள்ள முடிதல்.

23. ஜப்பானில் பயன்படுத்தப்படுகினற பண அலகு
1. பவுன் 2. யென் 3. யுவான் 4. டொலர்

24. அரசு வணிகங்களுக்கு வரிச்சலுகையினைப் பெற்றுக் கொடுப்பது.
1. பலமாகும் 2. பலவீனமாகும் 3. வாய்ப்பாகும் 4. அச்சுறுத்தலாகும்.

25. வணிகமொன்று அகச்சூழலை ஆய்வு செய்வதன் மூலம் அறிந்து கொள்ள முடிவது.
1. பலங்களையும் வாய்ப்புக்களையுமாகும்.
2. பலங்களையும் பலவீனங்களையுமாகும்.
3. வாய்ப்புக்களையும் அச்சுறுத்தல்களையுமாகும்.
4. அச்சுறுத்தல்களையும் பலவீனங்களையுமாகும்.

26. 2017 சனவரி மாதத்திலிருந்து வங்கிக் கடனுக்கான வட்டி அதிகரிக்கப்பட்டுள்ளமை வணிகங்களில் ஏற்படுத்தும் தாக்கம்
1. வணிகங்கள் கடன் எடுப்பதற்கு தூண்டப்படும்.
2. வணிகங்கள் கூடுதலான பணத்தை வைப்பிலிடும்.
3. வணிகங்கள் கடன் எடுப்பதை மட்டுப்படுத்தும்.
4. பொருட்கள் சேவைகளின் விலை அதிகரிக்கும்.

27. வணிகமொன்றிற்கு போட்டியாளர்கள் ஏற்படுத்துகின்ற அழுத்த மொன்றாக குறிப்பிட முடியாதது.
1. போட்டியாளர்களின் உற்பத்தி பொருட்களின் விலைமட்டம்
2. போட்டியாளர்களின் பொருட்களின் பண்புத்தரம்
3. போட்டியாளர்களின் சந்தைப்படுத்தல் உபாயங்கள்
4. போட்டியாளர்களின் நிதிப்பலம்

28. சுயாதீனமாக தீர்மானமெடுப்பதற்கு விரும்புகின்ற சுக்ரிக்கு, ஆரம்பிப்பதற்குப் பொருத்தமான வணிக அமைப்பொன்று
1. சுக்ரி டெக்ஸ் 2. சுக்ரி அன்ட் சன்ஸ் 3. சுக்ரி அன்ட் கம்பனி 4. முஸ்லிம் இளைஞர் சங்கம்

29. தனியாளுரிமை வணிகத்துடன் ஒப்பிடும் போது பங்குடமை வணிகமொன்றில் காணப்படுகின்ற அனுகூலமொன்று
1. தீர்மானமெடுப்பதில் சுயாதீனமான தன்மை
2. கூடுதலாக மூலதனத்தை திரட்டக் கூடிய ஆற்றல்
3. சட்ட பூர்வமான ஆளுமை காணப்படல்
4. உரிமையாளரின் பொறுப்புக்கள் வரையறுக்கபபட்டிருத்தல்

30. பங்கு வழங்கல் மூலம் பாரியளவு மூலதனத்தை திரட்டக் கூடிய வணிகம்.
1. பங்குடமை வணிகமாகும் 2. சங்கமாகும்
3. கூட்டுறவாகும் 4. கம்பனியாகும்.

31. கூட்டுறவுச் சங்கமொன்றை பதிவு செய்ய வேண்டிய சட்டமாவது.
1. 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிச்சட்டமாகும்.
2. 1918 ஆம் ஆண்டின் வணிகப் பெயர்க் கட்டளைச் சட்டமாகும்.
3. 1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலகக்ச சட்டமாகும்.
4. 1840 ஆம் ஆண்டின் மோசடித தவிர்பபுச் சட்டமாகும்.



kalvi.lk

32. சமூக நலன்புரிவை நோக்கமாகக் கொண்டு நடாத்திச் செல்லப்படுகின்ற வணிகமாகக் குறிப்பிட முடியாதது.
1. கூட்டுறவு சங்கம் 2. அரச கூட்டுத்தாபனம்
3. மரண உதவிச்சங்கம் 4. கூட்டிணைக்கப்பட்ட கம்பனி

33. அத்தியவசிய சேவைகளுக்கு பொருத்தமானதும் நலனோம்பலை நோக்காகக் கொண்டு நடாத்திச் செல்லப்படுகின்ற வணிகமொன்றாகும்.
1. கூட்டுறவு 2. அரச கூட்டுத்தாபனம் 3. சங்கம் 4. புண்ணிய நிறுவனங்களாகும்

34. வணிகமொன்றின் பொறுப்பு வரையறுக்கப்படாத சட்ட ஆளுமையற்ற வணிக அமைப்புக்களை உள்ளடக்கிய தொகுதியாகும்.
1. பங்குடமை வணிகம், கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகள்
2. பங்குடமை வணிகம், தனியாள் உரிமை வணிகம்
3. கூட்டிணைக்கப்பட்ட கம்பனி, தனியாளுரிமை வணிகம்
4. தனியாளுரிமை வணிகம், கூட்டுறவுச் சங்கம்

35. பங்குடமை வணிகமானது பங்காளரிடையே ஏற்படுத்திக் கொள்கின்ற உடன்பாட்டிற்கேற்பவே ஆரம்பிக்கப்படுகின்றது. அந்த உடன்பாடு ஏற்படக் கூடிய முறைகள்
1. ஒன்றாகும் 2. இரண்டாகும் 3. மூன்றாகும் 4. ஐந்தாகும்

36. பின்வரும் வணிகங்களுள் சட்ட ஆளுமை கொண்ட வணிகம் எது?
1. பங்குடமை வணிகம் 2. தனியாளுரிமை வணிகம்
3. திணைக்களம் 4. அரசு கூட்டுத்தாபனம்

37. நிர்வாகம் அரசுக்குரிய வணிகம்
1. கூட்டுறவுவாகும் 2. தனியாளுரிமை வணிகமாகும்
3. கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகளாகும் 4. திணைக்களமாகும்

38. தனியாளுரிமை வணிகமொன்றின் பெயரைப் பதிவுசெய்வதற்கான கட்டளைச் சட்டம் எது?
1. குறித்த மாகாண சபையின் வணிகப் பெயர் பதிவுக்கட்டளைச் சட்டம்
2. மோசடி தவிர்ப்புக் கட்டளைச் சட்டம்
3. 2007 ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிச்சட்டம்
4. 1890 ஆம் ஆண்டின் பங்குடமைக் கட்டளைச்சட்டம்

39. சகீல் “சகீல் சில்லறைக்கடை” எனும் பெயரில் வணிகமொன்றை நடாத்திச் செல்கின்றார். சகீலின் வணிகத்தைப் பதிவு செய்ய வேண்டியது.
1. அது ஆரம்பிக்கப்பட்ட திகதியிலாகும்
2. அது ஆரம்பிக்கப்பட்டு 14 நாட்களின் பின்னராகும்
3. அது ஆரம்பிக்கப்பட்டு 14 நாட்களினுள் ஆகும்.
4. இதனைப் பதிவு செய்ய வேண்டியதில்லை

40. தனியாளுரிமை வணிகமொன்றை பதிவு செய்வதற்றுத் தேவையான விண்ணப்பபடிவத்தை பெறவேண்டிய இடம்
1. கம்பனிப் பதிவாளர் திணைக்களமாகும்.
2. பிரதேச அதிபர் அலுவலகத்திலாகும்.
3. கிராம சேவகர் அலுவலகத்திலாகும்.
4. பிரதேச சபையிலாகும்.



kalvi.lk

සියලු හිමිකම් ඇවිරිණි/ All Rights reserved

වයඹ පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව Provincial Department of Education

**වයඹ පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව**
**Provincial Department of Education - NWP**
**வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்**

**00 T I**

පළමු වාර පරීක්ෂණය - 10 ශ්‍රේණිය - 2018
First Term Test - Grade 10 - 2018
முதலாம் தவணைப் பரீட்சை - தரம் 10 - 2018

**சுட்டிலக்கம் ........................................ வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும் I நேரம் : 2 மணித்தியாலம்**

- **சகல வினாக்களுக்கும் விடையளிக்க.**

01) பின்வரும் விடய ஆய்வினை வாசித்து அதன் கீழ் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு சுருக்க விடை தருக.

பிரசாந்த் சில்வா க.பொ.த (சா/த) பரீட்சை வரை பாடசாலைக் கல்வியினைப் பெற்ற ஒருவராவார். பின்னர் அவர் தச்சுத்தொளிலாளியாக தனது தொழில் சார்ந்த வாழ்க்கையினை ஆரம்பித்தார். தச்சுத் தொழிலில் ஈடுபட்டுள்ள அவரிடம் காணப்பட்ட விசேட திறமை என்னவென்றால் செதுக்குதல் கலை தொடர்பான தேர்ச்சியாகும். செதுக்குதலில் தேசிய தொழில் சார் பயிற்சி அதிகார சபையில் பயிற்சிகளையும் அவர் பெற்றுக் கொண்டார். மிகச் சிறப்பாக தனது தொழிலை மேற்கொண்டு வந்த இவர் தான் உற்பத்தி செய்த மனைப்பொருட்களை விற்பனை செய்வதற்கு தனது தொழிற்சாலையின் முன்பாக “பிரசாந்த் மனைப்பொருள் உற்பத்தியாளர்” எனும் பெயரில் ஒரு விற்பனை நிலையத்தை ஆரம்பித்தார். அவரின் தொழிற்சாலையிலும், விற்பனை நிலையத்திலும் வேலை செய்வதற்கு 10 தொழிலாளர்கள் இணைத்துக்கொள்ளப்பட்டனர். தனது பிரதேசத்திலுள்ள வணிக வங்கியொன்றிலிருந்து கடனொன்றைப் பெற்று எதிர்காலத்தில் தனது வணிகத்தை மேலும் விரிவு படுத்தும் எண்ணமும் அவரிடம் காணப்படுகிறது.

1. மனித தேவை விருப்பங்களை நிறைவு செய்வதற்காக இவ்வணிகத்தால் உற்பத்தி செய்யப்படும் பொருட்களில் காணப்படுகின்ற இரு பண்புகளைத் தருக.
2. உற்பத்தியின் தன்மைக்கேற்ப இவ்வணிகம் எவ் வணிக வகையைச் சார்ந்தது?
3. இவ்வணிகத்துடன் தொடர்புடைய பிரசாந்த் சில்வாவிடம் காணக்கூடிய பலமொன்றைத் தருக.
4. மேற்குறிப்பிட்ட வணிகத்தினுள் காணக்கூடிய நிலம், உழைப்பு, போன்ற உற்பத்திக் காரணிகளுக்குரிய வளங்கள் இரண்டைத் தருக.
5. இவ்வணிகத்தில் அக்கறை கொண்டுள்ள இரு பிரிவினரைக் குறிப்பிடுக.
6. இவ்வணிகத்தில் புறச்சூழலுக்குரிய இரு காரணிகளைத் தருக.
7. இவ்வணிகத்தைக் கட்டாயம் பதிவு செய்ய வேண்டுமா? காரணத்தைக் குறிப்பிடுக.
8. இவ்வணிகத்தைப் பதிவு செய்யும் போது கட்டாயமாக பெற்றுக் கொள்ளவேண்டிய அறிக்கையொன்றைக் குறிப்பிடுக.
9. வணிக அமைப்புக்களை வகைப்படுத்தும் போது இவரின் வணிக அமைப்பானது எவ்வணிக அமைப்பு வகையினுள் உள்ளடக்கப்படும்.
10. வணிகத்தை மேம்படுத்துவதற்கான கடனைப் பெற்றுக் கொள்வதற்குப் பொருத்தமான வங்கி யொன்றைக் குறிப்பிடுக. (2x10=20 புள்ளிகள்)

02) 1. தேவை, விருப்பம் என்பவற்றுக்கிடையிலான இரு வேறுபாடுகளைத் தருக. (2 புள்ளிகள்)

2. பின்வரும் கூற்றுக்கள் உண்மை அல்லது பொய் என்பதைக் குறிபபிட்டுக் காட்டுக.
   (அ) வணிகம் என்பது மனித தேவைகள் விருப்பங்களை நிறைவு செய்வதற்காக பல்வேறு பொருட்கள் சேவைகளை உற்பத்தி செய்தல் அல்லது வழங்கல் என்பவற்றுடன் இணைந்த பொருளாதார நடவடிக்கையாகும். (...........)
   (ஆ) தரத்தில் சிறந்த பொருட்களை நியாயமான விலையில் பெற்றுக் கொள்வதே நுகர்வோரின் நோக்கமாகும். (...........)
   (இ) வணிகத்தில் ஈடுபடுத்துகின்ற உளரீதியான பங்களிப்பு உழைப்பு எனப்படும். (...........)
   (ஈ) முகாமையாளரின் பிரதான நோக்கம் தேவையானளவு இலாபம் உழைப்பதாகும். (...........)
   
   (½ x4=2 புள்ளிகள்)

3. சிறிமாலி தயாரிக்கப்பட்ட உணவுப் பொருட்களை விற்பனை செய்யும் வணிகமொன்றை அவரின் பெயரில் நடாத்திச் செல்கிறார்.
   (அ) உற்பத்தியின் தன்மைக்கேற்ப இவ்வணிகம் எவ்வகை வணிகத்தைச் சார்ந்தது?
   (ஆ) தயாரிக்கப்பட்ட உடன் உணவுகளைச் சந்தைக்கு வழங்கும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய இரு விடயங்களைக் குறிப்பிடுக.

4. (அ) வணிகமொன்றில் உரிமையாளர் என்றால் யார்? விளக்குக.



kalvi.lk

(ஆ) பின்வரும் பிரிவினர் வணிகங்களில் அக்கறை காட்டுவதற்கான ஒரு காரணத்தைக் குறிப்பிடுக.
1. வழங்குநர் 2. பொதுமக்கள்

03) 1. திலிப் தான் வசிக்கும் பிரதேசத்தில் சுத்தமான காய்கறிகள் மற்றும் பழவகைகளை விற்பனை செய்வதற்கான வணிகமொன்றை குருநாகல் - கண்டி வீதியில் நடாத்திச் செல்கிறார். வணிகத்தை சிறப்பாக மேற்கொள்வதற்கும் விற்பனை நடவடிக்கைகளின் உதவியினைப் பெற்றுக் கொள்வதற்குமாக ஊழியரொருவர் இணைத்துக் கொள்ளப்பட்டார். அத்துடன் இதே போன்ற வணிகமொன்று சற்றுத் தூரத்தில் அண்மையில் ஆரம்பிக்கப்பட்டது.

(அ) வணிகச் சூழலை வகைப்படுத்தக் கூடிய பிரதானமான இரு முறைகளைக் குறிப்பிடுக.

(ஆ) மேலே தரப்பட்ட பந்தியின் உதவியுடன் வணிகச் சூழலின் இரு வகைகளுக்குரிய பிரிவினரை வெவ்வேறாக எழுதிக் காட்டுக. (2 புள்ளிகள்)

(மொத்தம் 8 புள்ளிகள்)

2. பின்வரும் கூற்றக்கள் உண்மை அல்லது பொய் என்பதைக் குறிப்பிடுக.
(அ) வணிகமொனிறின் வாடிக்கையாளருக்கும், ஊழியர்களுக்குமிடையிலான சிறந்த தொடர்பு முகாமையாளராலேயே கட்டியெழுப்பபடுகின்றது.
(ஆ) 1954 ஆம் ஆண்டு 14 ஆம் இலக்க, கடைகள், காரியாலய ஊழியர் சட்டம், சட்டச் சூழலிற்குரியதாகும்.
(இ) நவீன தொழில் நுட்பங்களைப் பெற்றுக் கொள்ள முடிதல் பூகோளச் சூழலில் இடம் பெறுகின்ற சாதகமான தாக்கமொன்றாகும்.
(ஈ) வணிகத்தின் பூகோள ரீதியான அமைவிடம் பொருத்தமற்றதாகக் காணப்படல் வணிகத்திற் குள்ள அச்சுருத்தலொன்றாகும். (2 புள்ளிகள்)

3. (அ) நாடொன்றின் பொருளாதாரச் சூழலுக்குரிய இரு காரணிகளைத் தருக.
(ஆ) “பூகோள மயமாதல்” என்பதனை விளக்குக. (2 புள்ளிகள்)

4. சஜாத் தனது தந்தையிடமிருந்து பெற்றுக் கொண்ட அனுபவம் மற்றும் அறிவு என்பவற்றின் அடிப்படையில் சீமெந்துடன் இணைந்த பொருட்களை உற்பத்தி செய்யும் வணிக மொன்றை ஆரம்பித்தார். இவ்வணிகத்திற்கு அண்மையில் இவ்வகை வணிகமொன்று காணப்படாமை. சஜாத் வணிகத்தில் வெற்றிக்கு காரணமாயமைந்தது. அதற்கேற்ப சஜாத் வணிகத்தின்,
(அ) பலமொன்றையும்
(ஆ) வாய்ப்பொன்றையும் தருக. (2 புள்ளிகள்)

(மொத்தம் 8 புள்ளிகள்)

04) 1. (அ) அரசதுறை வணிக அமைப்பு என்றால் என்ன என்பதை விளக்குக.
(ஆ) அவ்வாறான வணிக அமைப்புக்களுக்கு இரு உதாரணங்களைத் தருக. (2 புள்ளிகள்)

2. பின்வரும் கூற்றுக்கள் உண்மை அல்லது பொய் என்பதைக் குறிப்பிடுக.
(அ) 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்கக் கம்பனிச் சட்டத்தின் படியே பங்குடமையொன்றில் இருக்கவேண்டிய பங்காளர் எண்ணிக்கையானது தீர்மானிக்கப்படுகின்றது.
(ஆ) பங்குடமையொன்றில் இருக்க வேண்டிய உச்ச பங்காளர் எண்ணிக்கை 2 ஆகும்.
(இ) பட்டயக் கணக்காளர்கள் சிலர் ஒன்று சேர்ந்து கணக்காய்வு நிறுவனமொன்றை நடாத்திச் செல்கின்றார். இது பங்குடமை வணிகத்திற்குரிய செயற்பாடல்ல.
(ஈ) கூட்டுறவுச் சங்கங்களுக்கு பங்குவழங்கல் மூலம் மூலதனத்தை திரட்டிக் கொள்ள முடியும். (2 புள்ளிகள்)

3. வணிகமொன்றில் பருமனைத் தீர்மானிக்கும் போது கவனத்தில் கொள்ளப்படுகின்ற இரு காரணிகளைத் தருக. (2 புள்ளிகள்)
4. சமூக நலனோம்பலை நோக்கமாகக் கொண்டு நடாத்தப்படுகின்ற தனியார் துறை சார்ந்த அமைப்புக்களுக்கு மூன்று உதாரணங்களைத் தருக. (3 புள்ளிகள்)
5. பாரியளவு வணிகமொன்றை ஆரம்பிப்பதற்கு அடிப்படையாகக் கொள்ளப்படும் மூன்று காரணிகளைத் தருக. (3 புள்ளிகள்)

(மொத்தம் 12 புள்ளிகள்)



kalvi.lk

05) 1. சங்கவகை அமைப்புக்கள் என்றால் என்ன? (2 புள்ளிகள்)

2. பின்வரும் கூற்றுக்கள் உண்மை அல்லது பொய் என்பதைக் குறிப்பிடுக.
   (அ) உரிமையின் அடிப்படையில் நோக்கும் போது இலங்கையில் தனியார் துறை, பொதுத்துறை சார்ந்த நிறுவனங்கள் காணப்படுகின்றது.
   (ஆ) அரச திணைக்களங்கள், கூட்டுத்தாபனம், கூட்டுறவு என்பன அரசதுறை (பொதுத்துறை) சார்ந்த நிறுவனங்களாகும்.
   (இ) இளைஞர் விளையாட்டுக் கழகம் சட்ட ஆளுமையுள்ள வணிகமொன்றாகும்.
   (ஈ) கூட்டுறவு வணிகமொன்றை ஆரம்பிப்பதற்கு ஆகக் குறைந்தது 10 அங்கத்தவர்களாவது இருத்தல் வேண்டும். (2 புள்ளிகள்)

3. வணிகமொன்றின் பெயரைப்பதிவு செய்வதனால் பெற்றுக் கொள்ளக்கூடிய இரு அனுகூலங்களைத் தருக. (2 புள்ளிகள்)

4. நிமல் தனது உறவினரனான கமல் என்பவருடன் இணைந்து நிமலின் வீட்டின் முன்னாள் 15 ஊழியர்களை ஈடுபடுத்தி நுளம்பு வலைகளை உற்பத்தி செய்யும் வணிகமொன்றை நடாத்திச் செல்கின்றார்.
   (அ) குடிசன புள்ளிவிபர திணைக்களத்தின் கருத்திற்கேற்ப பருமனின் அடிப்படையில் மேற்படி வணிகம் எவ்வகை வணிக அமைப்பிற்குரியது?
   (ஆ) உரிமையின் அடிப்படையில் வகைப்படுத்தும் போது மேற்குறிப்பிட்ட வணிகம் தனியர் துறையில் எவ்வகை வணிகத்தைச் சார்ந்தது? (3 புள்ளிகள்)

5. அமைச்சரொருவரின் கட்டுப்பாட்டின் கீழ் செயற்படுகின்றதும் முழுமையாக அரசின் நேரடிக் கட்டுப்பாட்டிற்குட்பட்டதுமான நிறுவனம் திணைக்களமாகும்.
   (அ) இலங்கையில் செயற்படுகின்ற திணைக்களங்களிற்கு உதாரணமொன்றைத் தருக.
   (ஆ) திணைக்களங்களில் காணப்படுகின்ற அனுகூலமொன்றைத் தருக. (3 புள்ளிகள்)

(மொத்தம் 12 புள்ளிகள்)

Education கல்வி அධ්‍යාපන



kalvi.lk

**முதலாம் தவணைப் பரீட்சை - 2018**
**வணிகமும் கணக்கியலும் - தரம் 10**
**விடைகள்**

## பகுதி I

| | | | |
|---|---|---|---|
| 1. 3 | 11. 1 | 21. 1 | 31. 3 |
| 2. 4 | 12. 2 | 22. 4 | 32. 4 |
| 3. 2 | 13. 4 | 23. 2 | 33. 2 |
| 4. 2 | 14. 3 | 24. 3 | 34. 2 |
| 5. 3 | 15. 4 | 25. 2 | 35. 3 |
| 6. 4 | 16. 2 | 26. 3 | 36. 4 |
| 7. 4 | 17. 4 | 27. 4 | 37. 4 |
| 8. 4 | 18. 2 | 28. 1 | 38. 1 |
| 9. 1 | 19. 3 | 29. 2 | 39. 3 |
| 10. 2 | 20. 3 | 30. 4 | 40. 2 |

## பகுதி II

01. 1. பௌதீக நிலைப்படொன்று காணப்படல்
தொட்டு வாழக் கூடியதாக இருத்தல்
2. பொருள் உற்பத்தி வணிகம்
3. செதுக்குதலில் காணப்படுகின்ற தேர்ச்சி
தேசிய தொழில்பயிலுநர் அதிகார சபையில் பயிற்சிப்பட நெறியொன்றைப் பின்பற்றியிருத்தல்
பாடநெறியொன்றைப் பின்பற்றியிருத்தல்
4. நிலம் - பலகை
உழைப்பு - தச்சர்களின் உழைப்பு
5. உரிமையாளர் - பிரசாத் சில்வா
ஓழியர்கள்
6. வாடிக்கையாளர், பலகைகளை வழங்குவோர்
தொழில்நுட்பச் சூழல் பொருளாதார சூழல்
7. அவரின் முழுமையான பெயரிவன்றி வேறு பெயரில் வணிகத்தை நடாத்திச் செல்வதனால்
8. கிராம அலுவலகம் அறிக்கை
9. தனியாள் உரிமை வணிகம்
10. எந்த வொரு வணிக வங்கியிலும்

02. 1. தேவைக்குரிய விளக்கம், விருப்பத்திற்குரிய விளக்கம்
2. அ. உண்மை ஆ. உண்மை இ. பொய் ஈ. பொய்
3. அ. பொருள் உற்பத்தி வணிகம்
ஆ. நுகர்வோரின் சுவை சமூக அந்தஸ்து வருமான மட்டம்
4. வணிகத்திற்கான வளங்களை வழங்குவோர்
ஆ. பொதுமக்கள் - சூழலிற்கேற்ப வணிகக் கருமங்கள் மேற்கொள்ளப்படுகின்றது. என்பதைப் பார்த்து
வழங்குநர் - தொடர்ச்சியாக கட்டணங்களைக் பெற்றுக் கொள்ளுதல் உரியவாறு பணத்தைப் பெற்றுக் கொள்ளல்.

03. 1. அ. அகச் சூழல், புறச் சூழல்
ஆ. அகச்சூழல் - வணிக உரிமையாளர், ஊழியர்கள்
2. அ. உண்மை ஆ. பொய் இ. உண்மை ஈ பொய்
3. அ. வட்டிவீதம், பணவீக்கம், வருமானப்பரம்பல், வேலைவாய்ப்பு, சரிவதெச தொடர்பு, வெளிநாட்டுக் விகிதம், சேமிப்பு
ஆ. பூகோள மட்டத்திற்காக, விளக்கம்
4. பலம் - தந்தையிடம் இது பெற்ற அனுபவம்
வாய்ப்பு - போட்டி வணிகமொன்று அண்மையில் காணப்படல்

4. 1. அரசு நிதி வழங்கியுள்ள அரசுக்குரிய வணிகங்கள்
அரச திணைக்களம், கூட்டுத்தாபனம்


kalvi.lk

2. அ. உண்மை ஆ. உண்மை இ. பொய் ஈ. பொய்
3. மூலதன அளவு, ஊழியர் எண்ணிக்கை, வலுப்பயன்பாடு
4. விவசாயக் கழகம், விளையாட்டுக் கழகம், மரண உதவிக் கழகம்
5. வணிகத்தின் தன்மை, வணிகத்தின் லாபம், வணிகத்தினால் பெற்றுக் கொள்ளக் கூடிய வகைகள்

5. 1. சங்க அமைப்புக்களுக்கான விளக்கம்
2. அ. உண்மை ஆ. பொய் இ. பொய் ஈ. உண்மை
3. வணிகத்தின் உரிமை உறுதிப்படுத்தப்படல்.
அரச ஊக்குவிப்புக்களை பெற்றுக் கொள்ளமுடியும்.
கடன் பெறுதல் இலகுவாக அமைதல்.
4. அ. சிற்றளவு
ஆ. பங்குடமை வணிகம்
5. அ. இலங்கைப்புகையிரதத் திணைக்களம், இலங்கை அஞ்சல் திணைக்களம், விவசாயத் திணைக்களம்
ஆ. அத்தியாவசிய தேவைகளைப் பெற்றக் கொள்ள முடிதல்.
பாரியளவிலான தேவைகளை வழங்குதல்
அரச ஊழியர்கள் காணப்படல்
சகலரையும் சமமாக மதித்தல்

Education கல்வி



kalvi.lk

# GRADE 6-11

## STUDY WITH US..!

# ICT ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Google Meet செயலி மூலமாக இணைய வழியில் நடைபெறும் ICT பாட நிகழ்நிலை வகுப்புகள்.

Conducted by
**Pathmanathan Pathmaraj**
(BIT,  B.COM, PGDM, MBA, ACPM, MCP, N+)



**TAMIL MEDIUM**
**ENGLISH MEDIUM**

**MONTHLY**
**600/=**

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள் தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**

கல்வி
Digital Learning Platform

www.kalvi.lk

Education கல்வி අධ්‍යාපන

**எங்கள் குறிக்கோள்**

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page